**புதுக்குடியிருப்பு பிரதேச சபை**

**முல்லைத்தீவு மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 31 மார்ச் 2019 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 31 யூலை 2019 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 10 ஒக்டோபர் 2019 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுளள் விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலிலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போதும் இவற்றினை சமர்ப்பிக்கும் போதும் பின்பற்றப்பட்டிருந்திருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சபையினால் வருடாந்தம் நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கும்போதும் அவற்றினை சமர்ப்பிக்கும்போதும் பின்பற்றப்பட்டிருக்கின்ற பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் உரியவாறு அங்கீகாரமளிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

(ஆ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குரித்தான கூட்டுமொத்தப் பெறுமதி ரூபா 4,989,659 கொண்ட 25 காணிகள், வாகனத்திருத்தம், பெறுமதி கணிப்பீட்டு அறிக்கைகள், தொழில்நுட்ப மதிப்பீட்டு பெறுமதி மற்றும் நிலஅளவை வரைபடம் என்பன சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தி மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | சபைக்குரித்தான ஆதனங்களினை சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் மற்றும் காணி ஆணையாளர் நாயகம் ஆகியோரின் முறையான கருத்தொருமைப்பாடு மற்றும் அங்கீகாரத்திற்கமைவாக வரையறுத்து அவற்றின் காணி உறுதிகளைப் பெற்று நில அளவை வரைபடங்கள் மூலமான அத்தாட்சியுடன் அங்கீகரிக்கப்பட்ட விலை மதிப்பீட்டாளர் அல்லது அரச விலை மதிப்பீட்டாளரின் மூலம் அவற்றின் பெறுமதிகளை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | புதுக்குடியிருப்பு மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக ரீதியான காணி பயன்பாட்டு கூட்டங்களில் சிபார்சு செய்யப்பட்டும், மாவட்ட மட்ட காணி பயன்பாட்டு கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டும் மாகாண காணி ஆணையாளர் நாயகத்திற்கு ஆவணங்கள் சமர்ப்பிக்க ப்பட்டுள்ளன. சபைக்குரிய காணி ஆவணங்களை புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் பெயரில் வழங்குவதற்கு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

(இ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நூலகங்களுக்கான புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்காத நிலையில் 31 திசெம்பர் 2018 அன்று கூட்டுமொத்தம் ரூபா 482,449 பெறுமதியான காசோலையொன்று வரையப்பட்டு நாளதுவரை அலுவலகத்தில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. | கொடுப்பனவினை அத்தாட்சிப்படுத்திய அலுவலர் மீது விசாரணை மேற்கொண்டு உரியவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | எமக்கு கிடைக்க வேண்டிய புத்தகங்கள் அனுப்பி வைக்கப்படாமையால் காசோலை வழங்கப்படாது இருந்தது. இத்தவறுகள் இனிவரும் காலங்களில் ஏற்படாதவாறு கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி,நிர்வாக விதிகள் | | | |
| (i) அத்தியாயம் III இன் பிரிவு 33 | சோலை வரி சம்பந்தமான கணிப்பீட்டினை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சோலை வரி மதிப்பீட்டினை விரைவாக மேற்கொண்டு சோலை வரியினைக் கணிப்பீடு செய்து வருடமொன்றுக்கான சோலை வரியினை ஒவ்வொரு காலாண்டிலும் சபையின் ஆளுகைக்குட்பட்ட ஆதனங்களிலிருந்து உரியவாறு அறவிடப்பட்டு வருமான முகாமைத்துவத்தினை செப்பனிடுவதற்கு சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | ஆதனங்களுக்கான பெறுமதி மதிப்பீட்டு நடவடிக்கைகள் நிறைவடைந்ததும் வரி அறவீட்டுக்கான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ii) அத்தியாயம் V இன் பிரிவு 140 | பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமொன்றிற்கு செலுத்தப் பட்டிருந்த ஆறு முற்பணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 274,367 கடந்த 08 ஆண்டுகளாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டதுடன் அவை வழங்கப்பட்டிருந்ததன் | முற்பணத்தினை சீராக்கம் செய்வதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | சபைத் தீர்மானத்துடன் இவ் வருட இறுதிக்கணக்கறிக்கையில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | நோக்கமும் கணக்காய்வுக்கு கிடைத்திருக்கவில்லை. | | |
| (iii) அத்தியாயம் IX இன் பிரிவு 180 | காசு களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்பாயிருக்கும் அலுவலர்களிடம் பிணைப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காசு களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்புள்ள அலுவலர்களிடம் உரிய காலத்தில் பிணைப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | எமது சபையில் 14 உத்தியோகத்தர்கள் பிணைப்பணம் செலுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டு இவர்களில் 07 உத்தியோகத்தர்கள் முழுமையாகச் செலுத்தி அவர்களின் நிதி அவ்உத்தியோகத்தர்களது பெயரில் நிலையான வைப்பிலிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 07 உத்தியோகத்தர்களிடமும் (2019 யூன், யூலை, ஆகஸ்ட்) முழுமையாக அறிவிடப்பட்டுள்ளது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| நிதிப்பிரமாணம் 571 | காலம் கடந்த 12 கேள்விவைப்புக்கள் 33 பிடிபண வைப்புக்கள் மற்றும் 33 நானாவித வைப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 4,901,920 தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காது 02 தொடக்கம் 07 ஆண்டுகளாக வைப்புக்கள் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தன. | காலங்கடந்த நிலையிலுள்ள இத்தகைய வைப்புக்களினை சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு மீளளிக்கப்பட்டிராமைக்கான காரணங்களினை சபையானது உரியவாறு பரிசீலித்து அதன் பிரகாரம் அத்தரப்பினர்களினை உரியவாறு அடையாளங்கண்டு மீளளிப்பதற்கு அன்றேல் அவற்றினைச் சீர்செய்வதற்கு அன்றேல் முறையான அனுமதியுடன் உரியவாறு அரசிறைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | வைப்புக்களை இவ்வருடத்திற்குள் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டி | | | |
| கைந்நூல் பிரிவு 5.4.12 | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி சபையினால் செலுத்தப்பட்ட பின்னர் அதன் விபரங்கள் அடுத்து வரும் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துக்கும் அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்டிருக்கும் கைந்நூலின் பிரிவு 5.4.12 இற்கமைவாக குறித்தவொரு மாதத்தில் செலுத்தப்பட்டிருக்கும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி விபரங்களை உடன் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க தொடர் நடவடிக்கையானது சபையினால் மேற்கொள்ளப்படுதல் அவசியமானது. | இனிவரும் காலங்களில் ஒவ்வொரு மாதமும் 15ம் திகதிக்கு அனுப்பிவைக்கப்படும் என்பதை தங்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன். |

## 1.4.2 வரித்தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2015 ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதிய SEC/Stampduty/2015/03 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டிய முத்திரை தீர்வைகள் கூட்டுமொத்தம் ரூபா 68,225 கடந்த 01 மாதம் தொடக்கம் 24 மாதங்கள் வரையில் அனுப்பப்பட்டிராது வைப்புக்கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்த 49 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | உள்நாட்டு இறைவரித் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் முத்திரைத்தீர்வைகளினை அனுப்பீடு செய்வதற்கு உரிய காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தவேண்டிய முத்திரைக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. விரைவில் இக்கட்டணம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படவுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |
| (ஆ) | தேசத்தை கட்டியெழுப்பும் வரி கூட்டுமொத்தம் ரூபா 120,415 உள்நாட்டு இறைவரி ஆணையாளர் | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் கருத்தொருமைப்பாடு பெறப்பட்டு இவ்வரி | மாகாண கணக்காய்வு உத்தியோகத்தர்களிடம் பெறப்பட்ட ஆலோசனைக்கிணங்க 31 |

| | | |
|---|---|---|
| நாயகத்திற்கு அனுப்பப்பட்டிராது கடந்த 05 ஆண்டுகளாக வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்ட பின்னர் மீளாய்வாண்டில் சபையின் வருமானக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தமையினை கணக்காய்வில் திருப்திகரமாக ஏற்று உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | திரட்டப்பட்ட மூலங்கள் சபையின் செயலாளரினால் அடையாளம் காணப்பட்டு உரிய அனுமதி பெறப்பட்டு நடவடிக்கைகள் சீராக முடிவுறுத்தப்பட வேண்டும். | திசெம்பர் 2018 ஆம் திகதிய வருட இறுதிக்கணக்கில் வருமானமாக மாற்றப்பட்டது. |

### 1.4.3 போதியளவு அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுமொத்தம் ரூபா 1,781,650 பெறுமதியான நான்கு கொடுக்கல் வாங்கல்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்காமையால் அவற்றை திருப்திகரமாக ஏற்று கணக்காய்வில் உறுதிப்படுத்தமுடியாதுள்ளது. | நிதிப்பிரமாணம் 137 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் கொடுப்பனவானது மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | 2018 டிசம்பர் மாத உறுதிச்சிட்டைகளான 177, 178, 180, 181 என்பவற்றிற்குசபையின் அங்கீகாரம் பெறப்பட்டு அங்கீகார ஒப்பமும் பெறப்பட்டுள்ளது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 40,570,244 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 51,616,740 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரிகள் | 216,000 | 223,700 | 223,700 | _ | 180,000 | 199,500 | 199,500 | _ |
| (ii) | வாடகைகள் | 17,349,000 | 17,788,141 | 17,337,131 | 615,797 | 15,445,560 | 16,842,970 | 16,030,940 | 812,030 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 12,530,000 | 6,805,052 | 6,805,052 | _ | 2,635,000 | 10,404,470 | 10,404,470 | _ |
| (iv) | ஏனைய வருமானம் | 17,444,000 | 32,726,896 | 10,591,236 | 38,152,548 | 8,870,820 | 32,729,880 | 7,307,270 | 25,422,610 |
| | **மொத்தம்** | 47,539,000 | 57,543,789 | 34,957,119 | 38,768,345 | 27,131,380 | 60,176,820 | 33,942,180 | 26,234,640 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்பட்டிராமையும் மதிப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமையாலேயுமே பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே வேறுபாடு ஏற்பட்டிருந்தது.

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரசிறைக்கடனாளிகள் கணக்கில் காட்டப்பட்டிருந்த வாடகைகளும் குத்தகைகளும் நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 615,797 பெறுமதியானவற்றில் ரூபா 164,760 ஆன நிலுவையினை கடந்த 02 வருடங்களாக அறவிடப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையாகவுள்ள குத்தகைக் கட்டணம் ரூபா 615,797 இனை அறவிட்டுக்கொள்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் மீளாய்வாண்டில் ஒலுமடு மற்றும் புதுக்குடியிருப்பு உப அலுவலகங்களின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் இயங்குகின்ற 411 வியாபார நிலையங்கள் நிரந்தர வியாபார அனுமதிப்பத்திரம் | நிரந்தர வியாபார உரிமம், வரிச் சான்றிதழ் பெறப்பட்டிருக்காது செயற்படும் வியாபார நிலையங்களினை அடையாளங்கண்டு நடவடிக்கைகள் | நிரந்தர அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு குறித்த வியாபார நிலையங்களுக்கு பூரணமான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் நிரந்தர அனுமதிப்பத்திரங்கள் வழங்க |

| | | |
|---|---|---|
| பெற்றுக்கொள்ளப்படாது தற்காலிக அனுமதிப்பத்திரத்துடன் தொழிற்படுகின்றன. சபையினால் நிரந்தர வியாபார அனுமதிப்பத்திரம் வழங்குதல் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதிவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளெவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்படுவதுடன் குறித்த வருடமொன்றுக்கான வியாபார வரியினைக் கணிப்பீடு செய்து உரிய காலத்தில் உரியவாறு அறவிட்டு சபையின் வருமானக் கணக்கிற்கு கொண்டுவருவதற்கு வருடாந்தம் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | முடியாதுள்ளது. |

## 2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 36,505,190 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 1,647,357 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | சபைக்குரித்தான நீதிமன்ற தண்டப் பணங்களினை அவை உரித்தாக்கப்பட்டு ஒரு வருட காலத்தினுள் பிரதம செயலாளரிடம் கோரிப் பெற்றுக் கொண்டு செயலாற்றுவதற்கு சபையினால் ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | 2017 ஆம், 2018 ஆம் ஆண்டுக்கான நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 15,788,841.09 தற்போது பெறப்பட்டுள்ளது.<br><br>2018ம் ஆண்டுக்கான வருமானம் ரூபா 20,716,349.08 இனை எமக்கு வழங்குவதற்கான கோரிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வருமதி முத்திரைக் கட்டணங்கள் ரூபா 1,647,357.00 இதில் ரூபா 1,439,608.00 பெறப்பட்டுள்ளது. மிகுதியாகவுள்ள ரூபா 207,749.00 விரைவில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகாதார வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டினை அடைவதற்கு தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 06 வீதி புனரமைப்பு செயற்பாடுகளின் செயலாற்றலுக்கு மீளாய்வாண்டில் ரூபா 20,926,805 தொகையொன்று சில்லறைக் கடனாளிகள் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்டு செலவினமாகக் காட்டப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் வெளியீட்டினை அடைந்து கொள்வதற்கான நடவடிக்கைகளினை மேற்கொள்வதற்கு சபை தவறியிருந்தது. | குறித்த நிதியாண்டு காலத்தில் முடிவடைந்த வேலைகளின் அளவுகளுக்குரிய பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு மூலதன செலவினமாகக் காட்டப்படுவதுடன் அவற்றில் வழங்குனர்களுக்கு செலுத்தப்படாதுள்ள சான்றுப்படுத்தப்பட்ட சிட்டைகளின் பெறுமதிகள் மாத்திரமே சில்லறைக் கடனாளிகள் கணக்கிற்கு கொண்டு வரப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் குறித்த செயற்றிட்டங்களினை உரிய காலத்தில் நிறைவேற்றி அவற்றிலிருந்தான பயன்பாட்டினை பொதுமக்களுக்கு பெற்றுக் கொடுக்க சபையானது ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | குறித்த வேலைகளுக்கான நிதி சில்லறைக் கடன் கொடுநர் பதிவில் வைக்கப்பட்டிருந்தபோதும் நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக குறித்த காலப்பகுதியில் வேலைகளை முடிவுறுத்த இயலாமல் போயுள்ளது. |

**(ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் எல்லைப் பரப்பிலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூளங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகளை மட்டுமே சபையால் மேற்கொள்வதேயன்றி கொம்பொஸ்ட் மற்றும் மீள்சுழற்சி செயற்திட்டங்களைக் கொண்ட திண்மக்கழிவு முகாமைத்துவத்தை செயற்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளெவையும் சபையினால் முன்னெடுக்கப்பட்டிருக்கப்படவில்லை. | திண்மக்கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய செயற்திட்டங்களைக் கொண்ட திண்மக்கழிவு முகாமைத்துவத்தை செயற்படுத்த சபையினால் விரைந்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | PSDG-2019 ஆம் திட்டத்தில் கொம்போஸ்ட் யாட்செய்யும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வெவ்வேறு நிறத்தினாலான தரம் பிரிக்கும் கழிவுத்தொட்டிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. கழிவுகளை தரம் பிரித்து திண்மக்கழிவு முகாமைத்துவத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு சபையினால் நிறைவேற்றிக்கொள்ளக்கூடிய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதில் நிலவும் இடைவெளிகளைப் போன்றே செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்கான பொருத்தமான குறிகாட்டிகள் 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | உள்ளூராட்சி அமைச்சின் அனுமதியுடன் முன்னெடுப்பதற்கு 2019.07.23 ஆந் திகதி ஆவணங்கள் அனுப்பப்பட்டுள்ளன. தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | சபைக்குரித்தான எட்டு வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கடந்த 01 தொடக்கம் 05 ஆண்டுகளாக நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அவற்றின் பெறுமதிகள் குறைத்துக்காட்டப்பட்டுள்ளன. | சபையினால் பயன்படுத்தப்பட்டுவரும் சகல வாகனங்களின் பெறுமதிகள் சபையின் நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்படுதல் வேண்டும். | வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்படுதல். |
| (ஆ) | மீளாய்வாண்டில் கூட்டுமொத்தம் ரூபா 54.3 மில்லியன் பெறுமதியில் மதிப்பிடப்பட்டிருந்த 14 மூலதன வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிராது முற்றாக கைவிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இதற்குரிய காரணங்கள் கணக்காய்வுக்குக் | சபையின் வருடாந்த வரவு செலவுத் திட்டமானது பொருத்தமான அடிப்படைகளினை ஆதாரமாகக் கொண்டு பயன்மிக்க வகையில் தயாரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு கருத்துப் பெறலுக்காக காட்சிப்படுத்தப்பட்டு | 14 வேலைகளில் 02 வேலைகள் வகைமாற்றம் செய்யப்பட்டு வேலைகள் நிறைவேற்றப்பட்டன, 02 வேலைகள் ஒத்தி வைத்து காலப்போக்கில் செய்வதாக சபையினால் |

| | | |
|---|---|---|
| கிடைத்திருக்கவில்லை. | சபையினால் அங்கீகரிக்கப்பட்டு தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் வருடாந்த செயற்பாடுகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டு உரிய காலத்தில் ஆக்கபூர்வமாக நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | தீர்மானிக்கப்பட்டது. மீதி 10 வேலைகளும் 2019 வேலைத்திட்ட பாதீட்டில் உள்ளடக்கி 2019 ஆம் ஆண்டில் வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

### (அ) பதவி வெற்றிடங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபைக்குரிய 20 ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்காமையினால் முன்னெடுக்கப்பட்டிருக்கக் கூடிய சபையினது அபிவிருத்தித் திட்டங்களில் தாமதங்கள் ஏற்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | சபையின் நாளாந்த கருமங்கள் மற்றும் செயல்நிறைவேற்றலுக்கு வேண்டிய வருமானப் பரிசோதகர், சந்தை மேற்பார்வையாளர், சுகாதார மேற்பார்வையாளர், சாரதி, வேலைத் தொழிலாளி, சுகாதார தொழிலாளி ஆகிய பதவிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரை பெற்றுக்கொடுப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளர்/ பிரதம செயலாளரினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | அட்டவணைப்படுத்தப்பட்ட வெற்றிடங்கள் சம்பந்தப்பட்ட நியமன அதிகாரிகள் மூலமாகவே நிரப்பப்பட வேண்டும். |

### (ஆ) ஊழியர் கடன்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையிலிருந்து இடமாற்றம் பெற்று சென்றிருந்த அலுவலரொருவரின் பதவியினர் கடன்நிலுவை ரூபா 170,840 கடந்த 15 மாதங்களாக அறவிடப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட அலுவலர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த திணைக்களங்களுடாக அறவிடப்படுவதற்கு உரிய நடவடிக்கைகளினை | குறித்த சாரதியின் சம்பளம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது குறித்த உத்தியோகத்தருக்கு சம்பளம் வழங்கப்படும்போது ஊழியர் கடன் அறவீடு செய்யப்படும் என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன். |

| | | |
|---|---|---|
| | சபையானது மேற்கொள்ளல் வேண்டும். | |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்த இரு வாகனங்கள் கடந்த 02 தொடக்கம் 06 வருடங்களாக பழுதடைந்த நிலையில் காணப்படுவதோடு அவற்றினைப் பாவனைக்கேற்ற வகையில் திருத்தியமைத்து பயன்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது. | அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்ற வாகனங்களை சபைக்கு உரித்தானதாக்கி திருத்தம் செய்து பயன்மிக்க வகையில் உபயோகிக்க சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும | வாகனமொன்று வருடாந்த கணக்கெடுப்புச் சபையினால் பொது 47 படிவத்தில் விற்பனை செய்யலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றைய சக்கர உழவு இயந்திரம் திருத்தம் செய்யலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. |

**3.4.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்டு சபையின் பயன்பாட்டிலுள்ள 15 வாகனங்களுக்குரிய வாகனப் பதிவுப் புத்தகம் பெறப்பட்டிருக்க கடந்த 06 வருடங்களாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் உரியவாறு வாகனப் பதிவுப் புத்தகங்களை பெற்று சபைக்குரித்தான நிலையிலுள்ள வாகனங்களை பயன்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | பதிவுப்புத்தகம் இல்லாத வாகனங்களுக்கான உரிமைமாற்றம் தொடர்பான தொடர் நடவடிக்கை இவ்வாண்டு இறுதிக்குள் மேற்கொள்ளப்படும் |
| (ஆ) | அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களால் சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்த 08 வாகனங்களின் உரிமையை பிரதேச சபைக்கு மாற்றம் செய்வதற்கு நாளாதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்ற 08 வாகனங்களினை சபைக்கு உரித்தானதாக்குவதற்குரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படுதல் வேண்டும் | பதிவுப்புத்தகம் இல்லாத மேற்படி 08 வாகனங்களுக்கான உரிமைமாற்றம் தொடர்பான தொடர்நடவடிக்கை 2019 ஆண்டிறுதிக்குள் மேற்கொள்ளப்படும் |

| | | |
|---|---|---|
| | | என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன். |

### 3.4.3 வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபையின் அறிக்கையின் பிரகாரம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதி 757 இற்கமைவாக பின் தொடர் நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபையின் பரிந்துரைக்கமைவாக மேற்கொள்ளப்பட வேண்டிய பின் தொடர் நடவடிக்கைகளினை அவ் வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னராக மேற்கொண்டு முடிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும. | 2018 ஆம் ஆண்டின் வருடாந்த பொருள் மெய்மையாய்வின் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். விரைவில் இறுதி நடவடிக்கை முடிவுறுத்தி இது தொடர்பான அறிக்கை அனுப்பிவைக்கப்படும். |

## 3.5. பெறுகை

### 3.5.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் சபைக்குரிய பெறுகைத்திட்டம், மற்றும் பெறுகைக்கால அட்டவணை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையானது உடன் அடுத்துவரும் வருடத்திற்கான பெறுகைத் திட்டம் மற்றும் பெறுகைக்கால அட்டவணை என்பவற்றினை தயாரித்து அனுமதி பெறப்பட்டு அதன் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். | இனிவருங்காலங்களில் தனியாக பெறுகைக்கால அட்டவணை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 3.5.2 வழங்கல்கள் மற்றும் சேவைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டி நெறிகள் 8.9 இன் பிரகாரம் விலைக்கேள்வியாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்வியொன்றை ஏற்றுக்கொண்டதனையடுத்து விதிமுறைப்பட்ட ஏற்றுக்கொள்கைக் கடிதமொன்று பெறுகை நிறுவகத்தினால் விலைக்கேள்வியாளருக்கு வழங்கப்படுதல் வேண்டும். மேலும் 500,000 ரூபாய்க்கு விஞ்சுகின்ற எவையேனும் பண்டங்களுக்கான அல்லது சேவைக்கான ஒப்பந்தமொன்று நிறைவேற்றப்படுதல் வேண்டும். இதற்கு முரணாக சபையினால் மூன்று வழங்குனர்களிடம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 04 பண்டங்களின் கூட்டுமொத்தப் பெறுமதி ரூபா 2,633,736 கொள்வனவு பெறுமதி தொடர்பாக பெறுகை நடைமுறைகளின் போது ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருக்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டி நெறி 8.9 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | இனிவரும் காலங்களில் இத்தவறுகள் இடம்பெறாமல் ஒப்பந்தங்களை மேற்கொள்ளப்படும் என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன். |
| (ஆ) | 2006 ஆம் ஆண்டு பெறுகை வழிகாட்டியின் பந்தி 2.14.1 இன் பெறுகை குறைநிரப்பியின் பிரகாரம் வாங்குதல் முறையில் பண்டங்களின் பெறுகை நடைமுறைகளின் போது ரூபா 1 மில்லியனிலிருந்து ரூபா 5 மில்லியன் வரையான கொள்வனவின் போது ஆகக்குறைந்தது பதிவுசெய்யப்பட்ட 03 வழங்குனரிடமிருந்து விலைக்கேள்வி ஆவணங்கள் பெறப்பட்டு பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டியிருந்த போதிலும் பதிவு செய்யப்பட்ட வழங்குனரொருவருக்கு மாத்திரம் விலைக்கேள்வி ஆவணங்கள் அனுப்பப்பட்டு கூட்டுமொத்தம் ரூபா 1,257,000 இற்கு ஐந்து வளிபதனாக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | பெறுகை வழிகாட்டி நெறி பந்தி 2.14.1 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | பத்திரிகை விளம்பரத்தின்படி ஒரு வழங்குனர் மாத்திரம் கூறுவிலையை எம்மிடம் பெற்று எம்மிடம் சமர்ப்பித்திருந்தார். அதன் அடிப்படையிலேயே பொருள் கொள்வனவுகளும் இடம்பெற்றன. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் மீளாய்வாண்டிற்கான வரவு செலவுத்திட்டம் சரியான பொறி முறையினூடாக திட்டமிட்டு தயாரிக்கப்பட்டிருக்காமையால் ஆறு வகையான மதிப்பிடப்பட்ட செலவினம், உண்மைச் செலவினம் என்பவற்றிற்கிடையே 14 சதவீதம் தொடக்கம் 97 சதவீதம் வரையிலான வேறுபாடுகளும் ஐந்து வகையான மதிப்பிடப்பட்ட வருமானம் உண்மை வருமானம், என்பவற்றிற்கிடையே பாதகமானதும் சாதகமானதுமான வேறுபாடுகள் முறையே 20 சதவீதம் தொடக்கம் 162 சதவீதம் வரையிலும் ஏற்பட்டிருந்தன. | வருடாந்த வரவு செலவுத்திட்டத்தில் உள்ள விடயங்களினை உரிய பொறிமுறையின் ஊடாக திட்டமிட்டு கணிப்பீடு செய்து நடைமுறைப்படுத்துவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | இனிவரும் காலங்களில் இத்தவறு இடம்பெறாமல் நடவடிக்கை எடுக்கப்படும். |